### 18-ந் தேதி அனைவரும் வாக்களிக்குமாறு

# மெட்ரோ ரெயில்களில் தேர்தல் விழிப்புணர்வு சுவரொட்டி

சென்னை, ஏப். 13–

18–ந் தேதி அனைவரும் வாக்களிக்குமாறு மெட்ரோ ரெயில்களில் தேர்தல் விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது.

**மெட்ரோ ரெயில்**

பாராளுமன்ற தேர்தல் வருகிற 18–ந் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை பெறுவதற்காக தேர்தல் கமிஷன் சார்பில் பொது மக்களிடம் விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகிறது.

18 வயது நிரம்பிய, வாக்களிக்க தகுதி உடைய அனைவரும் இந்த தேர்தலில் தவறாமல் வாக்களிக்க தேர்தல் கமிஷன் வேண்டுகோள் விடுத்துள்ளது. தேர்தல் முறைகேடுகள் குறித்து 1950 என்ற 'டோல் பிரி' எண்ணில் புகார்களை பதிவு செய்ய அறிவுறுத்தி உள்ளது. இது குறித்த விழிப்புணர்வு சுவரொட்டிகள் பொது மக்கள், பயணிகள் பார்வைக்காக சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களிலும், மெட்ரோ ரெயில்களில் ஒட்டப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் குறித்த 24 வகையான விழிப்பு ணர்வு வீடியோக்கள் ஒளிபரப்பப்படுகிறது. 32 வகையான விழிப்புணர்வு போஸ்டர்களும் தேர்தல் கமிஷன் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ளது. சோசியல் மீடியா, மெட்ரோ ரெயில் வெப்சைட்டுகளிலும் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 32 மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் பயணிகளுக்காக தேர்தல் விழிப்புணர்வு சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது.




சென்னை மெட்ரோ ரெயிலில் தேர்தல் விழிப்புணர்வு சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.